1975 அக்டோபர் 28]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு மற்றும் தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனும்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு இவைகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(2) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்:—

(1) 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1975).

(2) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975).

(3) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு மூன்றும் திருத்த) மற்றும் தமிழ் நாடு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 30/1975).

(4) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனும்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 22/1975).